மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : எப்போது வேண்டுமானாலும் சைக்கிளில் செல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுத்துக்கொண்டால் அதிலே கூட வர நாங்கள் தயங்க மாட்டோம். (சிரிப்பு).

திரு. க. மீனாட்சிசுந்தரம் : 600 ரூபாய்க்குக் கீழே சம்பளம் பெறுகின்றவர்களுக்கு திருப்பிச் செலுத்துவதற்குரிய வசதி இல்லாத காரணத்தால், அவர்களுக்கு இந்த வசதியைத் தரவில்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். பணத்தைப் பிடித்தம் செய்யும்போது அதற்கு ஏற்றாற்போல் தவணையை நீட்டிப்பதால், அவர்களும் சுலபமாகத் திருப்பித் தர முடியும். அதற்கேற்ப தவணையை நீட்டித்துத் தர இந்த அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இப்பொழுது இருக்கிற அரசாணையில் உள்ள நிலையை நான் சொன்னேன். இனிமேல் இப்படிப்பட்ட அரசாணை வெளியிடப்படும்போது, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்துக்களைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

சென்னை, சென்ட்ரல் புகைவண்டி நிலையத்தில் பேருந்து விபத்து

* 152 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980, ஜூலை மாதம் 28 ஆம் நாள், பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று சென்னை சென்ட்ரல் புகைவண்டி நிலையத்தினுள் நுழைந்து மிகுந்த சேதத்தை ஏற்படுத்தியது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதனால் (i) புகைவண்டி நிலையத்துக்கும் (ii) பேருந்துக்கும் ஏற்பட்ட சேதம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) உண்மை.

(இ) (i) புகைவண்டி நிலையத்திற்கு ஏற்பட்ட சேதம்—ரூ. 10,000

(ii) பேருந்துக்கு ஏற்பட்ட சேதம்—ரூ. 7,644-84.

திரு. ம. சங்கரலிங்கம் : இந்த விபத்தால் உயிர்ச் சேதம் ஏதாவது ஏற்பட்டதா ? யாருக்காவது காயம் ஏற்பட்டதா ? இந்த விபத்து ஏற்பட்ட காரணம் என்ன ? இத்தகைய நிலை வருங்காலத்தில் வாராதிருக்கும் வகையில் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

1981 மார்ச் 23]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : உயிர்ச் சேதம் இல்லை. ஆனால் இரண்டு பேருக்கு ஓரளவுக்கு சாதாரண காயம் ஏற்பட்டது. 'பிரேக்' பிடிக்காமல் போனதால் இத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி அடிக்கடி ஏற்படுவதில்லை. எப்போதாவது ஒரு முறைதான் இப்படி ஏற்படுகிறது. இதற்குத் தேவையான சான்றிதழ் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட இந்த விபத்து ஏற்பட்ட பிறகு பேரவையிலே பிரச்சினை வந்து ஒரு கேள்வியின்போது இதுகுறித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னேன். அதற்கு ஏற்ப இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : விபத்துக்கு உள்ளான குறிப்பிட்ட பல்லவன் போக்குவரத்து பஸ் எந்த இடத்திலிருந்து எடுத்து வரப்பட்டது? சென்னை நகரிலிருந்து இது புறப்பட்டு வந்திருப்பதால், புறப்படுவதற்கு முன்பு பிரேக் சரியாக இருக்கிறதா என்று பரிசோதனை செய்யப்பட்டதா? அந்தப் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப்பட்டது? அதுபற்றி அரசு இலாகா பூர்வமான விசாரணை நடத்துமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மந்தைவெளியிலிருந்து பாரி முனைக்குப் புறப்பட்டது. அதனுடைய நம்பர் டி.எம்.என். 1500. இந்த வண்டி 19-2-1980-ல் இருந்து 18-8-1980 வரை தகுதிச் சான்றிதழ் பெற்றிருக்கிறது. 27-6-1980 அன்று பரிசோதனைக்காக விடப்பட்டபோது, அவர்கள் சரியாக இருக்கிறது என்று சான்றிதழ் கொடுத்திருக்கிறார்கள். இருந்தும் பிரேக் பிடிக்காமல் விபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட விபத்து அடிக்கடி ஏற்படக்கூடியதல்ல. சில நேரத்தில் அதுவும் இயந்திரமாக இருப்பதால், தவிர்க்க முடியாமல் பிரேக் பிடிக்காமல் இப்படி ஏற்பட்டு விடுகிறது. அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது அதிகாரிகளிடத்தில் சொல்லி பஸ்களைத் தகுந்த முறையில் பரிசோதனை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இதற்கு மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல், இதற்காக இலாகா பூர்வமாக விசாரணை ஏற்பாடு செய்வது அவ்வளவு பொருத்தமாக இருக்குமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : கேள்வி விபத்தைப் பற்றியதாக இருந்தாலும்கூட, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து பல்லவன் டிரான்ஸ் போர்ட் எக்ஸ்பிரஸ் பற்றி ஒன்றைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். பல்லவன் எக்ஸ்பிரஸ் பஸ் ஸ்டாண்டிலிருந்து பஸ்கள் புறப்படுவதால், உறுப்

பினர்கள் அங்கே சென்று பஸ்ஸில் ஏறுவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே எம்.எல்.ஏ. ஆஸ்டல் வழியாக எக்ஸ்பிரஸ் பஸ்களை விடுவது நலமாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 'விபத்து பற்றியதாக இருப்பதால்' என்று சொல்லிவிட்டு உறுப்பினர்களையும் விபத்தில் சேர்க்கப் பார்க்கிறார்களா ? (சிரிப்பு)

திரு. செ. முத்துசாமி : துரித பேருந்துகளை இரவு நேரங்களில், குறிப்பாக இரவு 9 மணியிலிருந்து 11 மணி வரை புறப்படுகிற பேருந்துகளை, எம்.எல்.ஏ. ஆஸ்டல் வழியாக விட்டால், சட்டமன்ற உறுப்பினர்கள் கஷ்டப்படாமல ஏறிச்செல்ல வசதியாக இருக்கும் என்பதால், மாண்புமிகு தலைவரவர்களே, உங்கள் மூலமாக இதற்குரிய ஏற்பாட்டினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதற்கு தலைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்கிறார்களா ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இரவு 9 மணி முதல் இரவு 11 மணி வரை நிறைய திருவள்ளுவர் துரித பேருந்துகள் புறப்படுகின்றன. எல்லாப் பேருநதுகளும் எம்.எல்.ஏ. ஆஸ்டல் வழியாக வந்தால், அதறகு இடம் போதாது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் இப்போது உள்ளவாறு, சிரமத்தைப் பார்க்காமல் பஸ் ஸ்டான்டுக்குப் போய் பஸ்ஸில் ஏறுவதுதான் வசதியான ஒன்று. அப்படிச் செய்தால் மற்றவர்களுக்கும் சிரமத்தை ஏற்படுத்தாது. அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், சட்டமன்ற உறுப்பினர்களுக்காக சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதியின் முன்பு காத்து இருக்க வேண்டியிருக்கிறது என்கிற குற்றச்சாட்டெல்லாம் வந்துவிடும். இதையெல்லாம் பார்த்து அருள்கூர்ந்து இந்த விஷயத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் சிரமத்தைப் பார்க்காமல் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்..

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]